# முதல் பருவத் தொகுத்தறிவுத் தேர்வு

மதிப்பெண்: 100

## தமிழ்

வகுப்பு - எட்டு - ____________ நேரம்: 2.30 மணி

**I. சரியான விடையைத் தேர்வு செய்க:** 10 × 1 = 10

1. தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டவர் ______________
   அ) பாரதிதாசன் ஆ) தந்தை பெரியார்
   இ) வ.உ.சிதம்பரனார் ஈ) பெருஞ்சித்திரனார்
2. தமிழர் மருத்துவத்தில் மருந்து என்பது ______________ நீட்சியாகவே உள்ளது.
   அ) மருந்தின் ஆ) உடற்பயிற்சிகள் இ) உணவின் ஈ) வாழ்வின்
3. மாடு வயலில் புல்லை மேய்ந்தது - இத்தொடரில் உள்ள வினைமுற்று ___________
   அ) மாடு ஆ) வயலில் இ) புல்லை ஈ) மேய்ந்தது
4. பறவைகள் ______________ பறந்து செல்கின்றன.
   அ) நிலத்தில் ஆ) விசும்பில் இ) மரத்தில் ஈ) நீரில்
5. செவ்விந்தியர்கள் நிலத்தைத் ______________ மதிக்கின்றனர்.
   அ) தாயாக ஆ) தந்தையாக இ) தெய்வமாக ஈ) தூய்மையாக
6. காந்தியடிகள் ______________ போற்ற வாழ்ந்தார்.
   அ) நிலம் ஆ) வையம் இ) களம் ஈ) வானம்
7. ஆய்த எழுத்து பிறக்கும் இடம் ______________
   அ) மார்பு ஆ) தலை இ) கழுத்து ஈ) மூக்கு
8. மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல் ______________
   அ) வைப்பு ஆ) கடல் இ) பரவை ஈ) ஆழி
9. சமையலறையில் செலவிடும் நேரம் ______________ செலவிடும் நேரமாகும்.
   அ) சுவைக்காக ஆ) சிக்கனத்திற்காக இ) நல்வாழ்வுக்காக ஈ) உணவுக்காக
10. முற்றுப் பெறாமல் எஞ்சி நிற்கும் சொல் ______________ எனப்படும்.
   அ) முற்று ஆ) எச்சம் இ) முற்றெச்சம் ஈ) வினையெச்சம்

**II. சரியான மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** 5 × 1 = 5

11. கோழி _____ (கொக்கரிக்கும் / கூவும்)
12. ஆ _____ (நிரை / மந்தை)
13. பூ _____ (கொய் / பறி)
14. சோறு _____ (தின் / உண்)
15. பால் _____ (குடி / பருகு)

**III. மனப்பாடப் பாடல்:** 5

16. ‘ஓடை’ எனத் தொடங்கி ‘போராரோடி’ என முடியும் ஓடைப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

IV. **எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி:** 5 × 2 = 10

17. நிலத்திற்கும், செவ்விந்தியர்களுக்கும் உள்ள உறவு யாது?
18. தமிழ் எவற்றை அறிந்து வளர்கிறது?
19. எச்சம் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?
20. மருத்துவம் எப்போது தொடங்கியது?
21. சான்றோர்க்கு அழகாவது எது?
22. ஒலி எழுத்து நிலை என்றால் என்ன?

V. **எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி:** 3 × 3 = 9

23. உடல் நலத்துடன் வாழக் கவிமணி கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
24. நீர்நிலைகள் குறித்துச் சியாட்டல் கூறியுள்ளவற்றை எழுதுக.
25. தமிழ்மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துகளை எழுதுக.
26. மூளையின் வலது இடது பாகங்களின் செயல்பாடுகள் பற்றித் தொகுத்து எழுதுக.

VI. **நெடுவினா:** 6 × 1 = 6

27. எழுத்துகளின் தோற்றம் குறித்து எழுதுக.

VII. **கட்டுரை எழுதுக:** 10

28. 'உயர்தனிச்செம்மொழி' என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

VIII. **வினைமுற்றுக்கு உரிய வேர்ச்சொல்லை எழுதுக:** 10 × 1 = 10

29. கேட்டார்
30. உறங்கினாள்
31. பேசினாள்
32. போனாள்
33. வாழிய
34. நடக்கிறது
35. வருக
36. சென்றனர்
37. பயின்றாள்
38. தருகின்றனர்

IX. **ஜோடி எழுத்துகளால் நிரப்புக:** 5 × 1 = 5

39. க___ ___த பொ___ ___ன்
40. அ___ ___சொ___ ___ம்
41. ப___ ___ ___ ___வன்
42. ந___ ___ப___ ___வி
43. கூ___ ___து மா___ ___து

X. **பன்மை விகுதியைச் சேர்த்தெழுதுக:** 10

44. கல், பூ, கிழமை, ஈ, கடல், கை, பக்கம், வாழ்த்து, பசு, சொல்

| கள் | க்கள் | ங்கள் | ற்கள் |
|---|---|---|---|
| | | | |

XI. **45. எண்களுக்குரிய தமிழ் எண்களை எழுதுக:** 10

அ) 3　இ) 26　உ) 6　எ) 25　ஐ) 9
ஆ) 12　ஈ) 21　ஊ) 16　ஏ) 18　ஒ) 5

XII. **பெயரெச்சம், வினையெச்சம் - வகைப்படுத்துக:** 10

46. நல்ல, பாய்ந்து, கடந்து, படுத்து, எறிந்த, வீழ்ந்த, பிடித்து, மாட்டிய, பார்த்து, அழைத்து